Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | செவ்வாய்க்கிழமை | பங்குனி 29 ஆம் நாள் | பக்கங்கள்: 16
கதிர் : 137 | 12 ஏப்ரல் 2022 | வள்ளுவர் ஆண்டு 2053 | விலை : ரூ.40

## எரிபொருள் வரிசையில் எட்டாவது உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 12
காலி மாவட்டத்தின் ஹினிதும, தவலம 16 >

## யாழில் 5 ஆவது மலேரியா நோயாளி

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் மலேரியா நோயாளி ஒருவர் 10 >

## 3 நாள்களுக்கு கொள்கலனில் எரிபொருள் வழங்கப்படாது

கொழும்பு, ஏப். 12
எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றை 16 >

## 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நேற்று இறக்குமதி

கொழும்பு, ஏப். 12
இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி 15 >

### ஜே.வி.பி. கிளர்ச்சி, புலிகளின் போராட்டம் இரத்தக்களறியை நினைவுபடுத்தி-

# போராட்டக்காரர்களை வெருட்ட முனைந்த மஹிந்த



நேற்றைய விசேட உரையில் நெருக்கடிக்குத் தீர்வு எதுவும் இல்லை

கொழும்பு, ஏப்ரல் 12

கடந்த காலங்களில் ஜனநாயக மறுப்பு கோஷங்கள் முன்வைக்கப்பட்டே ஜே.வி.பியின் கிளர்ச்சியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன என்றும் அதன் காரணமாக இரத்தக்களறியே ஏற்பட்டது எனவும் குறிப்பிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அவ்வாறானதொரு இருண்ட யுகத்தை மீண்டும் உருவாக்கவேண்டாம் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் சமூகத்தினரிடம் கோருவதாகவும் குறிப்பிட்டார். கடந்த கால இரத்தக்களறி தொடர்பில் பெற்றோரிடம் கேட்டறியுமாறும் அவர் தெரிவித்தார். 15 >



## கோத்தபாயவின் முடிவு தவறு இப்போது சொல்கிறார் மஹிந்த

*உரமானியம் வழங்கப்படுமாம்*

கொழும்பு, ஏப். 12
இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதித்தமை பொருத்த 08 >

## பதவியில் தொடர்வோம்

*சூசமாகச் சொல்லிய மஹிந்த*

கொழும்பு, ஏப். 12
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசை வீடு செல்ல வலியுறுத்தி நாடெங்கிலும் 08 >

## போர் வெற்றியையும் மறக்காத மஹிந்த

கொழும்பு, ஏப். 12
எத்தகைய நெருக்கடி நிலையிலும் நாட்டு மக்களுக்கு 08 >

## அவமானப்படுத்துகிறீர்கள்

*மஹிந்த ஆதங்கம்*

கொழும்பு, ஏப். 12
'அன்று பீதியிலிருந்த இளைஞர்களைக் காப்பாற்றுவதற்கு 08 >

## போராடும் ஒவ்வொரு விநாடியும் டொலர் பறிபோகின்றதாம்

கொழும்பு, ஏப். 12
நீங்கள் வீதியில் போராடும் ஒவ்வொரு விநாடியும் எமது நாட்டுக்கு டொலர் கிடைக்கும் சந்தர்ப்பம் இல் 08 >

## சுயாதீன அணியிலிருந்து இரு எம்.பி.க்கள் 'பல்டி'!

கொழும்பு, ஏப். 12
அரசிலிருந்து வெளியேறி சுயாதீன அணியாக இயங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இரண்டு நாடா 08 >



## கொட்டும் மழையிலும் ஓயாத 3ஆம் நாள் போர்

கொழும்பு, ஏப். 12
காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் நேற்று மூன்றாவது நாளா 08 >

## ராஜபக்ச ஆதரவுக் கும்பல் சிலாபத்தில் விரட்டியடிப்பு

கொழும்பு, ஏப். 12
சிலாபம் நகரில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, ஜனாதிபதி கோத்தா 08 >

### யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில்

## லொறி மோதியதில் சிறுவன் உயிரிழப்பு

**மண்ணெண்ணெய் வாங்கச் சென்றபோது பயங்கரம்**

யாழ்ப்பாணம், ஏப். 12
மண்ணெண்ணெய் வாங்குவதற்காக பேர்த்தியாருடன் மோட்டர் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்ற 10 வயதுச் சிறுவன், லொறி மோதி 10 >




## காலி முகத்திடலில் 'கோத்தா கோ கிராமம்'

கூகிளிலும் தரவேற்றம்

கொழும்பு, ஏப். 12
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலி 08 >

## குடும்ப ஆட்சியை கட்டியெழுப்ப ஒருபோதும் இடமளிக்க முடியாது!

**21 மில்லியன் மக்கள் வாழும் நாட்டை 226பேர் சீரழித்துவிட்டனர் என்று சிறீதரன் எம்.பி.**

கொழும்பு, ஏப். 12
ஊழலுக்கும், உறவுமுறைகளுக்கும், இலங்கை மக்களின் முதுகில் குடும்ப ஆட்சியைக் கட்டியெழுப்புவதற்கும் இட 10 >

## கோத்தா ஆதரவாளர்களுக்கு புல்லும், புண்ணாக்கும்!

*எதிர்ப்பாளர்கள் விநோதப் போராட்டம்*

கொழும்பு, ஏப். 12
ஜனாதிபதி கோத்தாபயவுக்கு ஆதரவாக அநுராதபுரத்தில் நேற்று பேரணி ஏற்பாடு செய்யப் 15 >

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தை நாடினும் மீட்சி கிட்ட காலம் எடுக்கும்

## ரணில் கணிப்பு



**கொழும்பு, ஏப். 12**

**இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடினாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அர்த்தமுள்ள நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் தேவை என்று முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அரசாங்கத்தின் திறமையின்மையால் நாடு ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் ஆரோக்கியமான நிலையில் இருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் திறமையின்மை மக்களை வீதிக்கு இறக்கியுள்ளது.

மோசமான பொருளாதார நிலைமை அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது. இது நாட்டுக்குப் பேரழிவு. இரண்டு ஆண்டுகளாக, இந்த அரசாங்கம் பொருளாதாரப் பிரச்சினைகளின் அனைத்து அறிகுறிகளையும் புறக்கணித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறும்போது மாற்று வழிகளைத் தேட வேண்டியதும் அவசியம். நிதிச் சவால்களைக் கையாள்வதில் தற்போதைய அரசாங்கம் முற்றாகத் தோல்வியடைந்தமையால் இன்று மக்கள் நீண்ட வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (க-இ)

*முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய*

# அரச சொத்துக்களை ஒப்படைக்கப் பணிப்பு

கொழும்பு, ஏப். 12

அரசாங்கத்திலிருந்து பதவி விலகியுள்ள அமைச்சர்கள் பயன்படுத்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துக்களை மீளப்பெறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக அவர்கள் பயன்படுத்திய இல்லங்கள், வாகனங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்களை மீளப்பெறவேண்டும் என்று அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திறைசேரி அறிவுறுத்தியுள்ளது.

திறைசேரியின் செயலாளராக அண்மையில் பதவி விலகிய எஸ்.ஆர்.ஆட்டிகல, தான் பதவி விலகுவதற்கு முன்னர் இதுதொடர்பான சுற்றறிக்கையில் கையெழுத்திட்டுள்ளார். அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. (க-இ)

# கடற்படைப் படகுகள் மோதல் சிப்பாயைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 12

காரைநகர் மற்றும் நெடுந்தீவு கடற்படை முகாம்களைச் சேர்ந்த படகுகள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஒன்றையொன்று மோதியதில், கடற்படைச் சிப்பாய் காணாமற் போயுள்ளார். அவரைத் தேடும் பணி கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காரைநகர் மற்றும் நெடுந்தீவு கடற்படை முகாம்களைச் சேர்ந்த படகுகள் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டன. சந்தேகத்துக்கிடமான படகை அவை அவதானித்துள்ளன. கடற்படையினரின் இரண்டு படகுகளும் அந்தப் படகை விரட்டிச் சென்றுள்ளன. இதன்போதே, கடற்படையினரின் படகுகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதாக கடற்படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். (ஒ-27)

# 'ஏ 4' தாள் உற்பத்தி இலங்கையில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 12

வாழைச்சேனை காகித உற்பத்தித் தொழிற்சாலையில் ஏ 4 தாள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமாக உரியதரத்தில் ஏ 4 தாள் உற்பத்தி செய்யப்படுவதாக தேசிய காகித கூட்டுத்தாபன பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சகல வகையான தாள்களுக்கும் நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



# தெல்லிப்பழையில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.12

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுத் தெல்லிப்பழை பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "விவசாயிகள், மீனவர்களுக்கு எரிபொருளை முன்னுரிமைப்படுத்து, அத்தியாவசிய பொருள்கள் எங்கே?, வடக்கு கிழக்கு மீதான இராணுவ மயமாக்கலை நிறுத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் நீக்கு, குழந்தைகளின் பால்மா எங்கே?, வலி.வடக்கு மக்களின் காணிகளை உடனடியாக விடுவி" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-27,20)

# பெரமுனவின் ஆட்சி கவிழாது

## நாமல் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 12

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் போடும் ஆட்டங்களை நான் வெறுக்கின்றேன். அவர்கள் என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் பொதுஜன பெரமுனவின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் வீட்டுக்குச் செல்லுமாறு கோரும் எதிர்க்கட்சியினரும், அவர்களின் ஆதரவாளர்களும் மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஏன் மௌனம் காக்கின்றனர? எதிர்க்கட்சியினருக்குள் ஒற்றுமை இல்லை. அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் பொங்குவதால் எவ்வித பயனும் ஏற்படாது.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தால்தான் தீர்வு காணமுடியும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியுடன் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் அது நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மையளிக்கும். மக்களின் ஆர்ப்பாட்டங்களை நான் வெறுக்கின்றேன் - என்றார். (க-22)

# உள்ளகப் பிளவைத் தடுக்கவே அமைச்சரவை ஒத்திவைப்பு!

## அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் ஏப். 12

அரசுக்குள் மேலும் பிளவை ஏற்படுத்தும் என்பதாலும், சர்வகட்சி இடைக்கால அரசமைக்கும் முயற்சி தோல்வி அடையக்கூடாது என்பதாலுமே நேற்று இடம்பெறவிருந்த புதிய அமைச்சரவை நியமனம் பிற்போடப்பட்டது என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நேற்று இடம்பெறவிருந்த புதிய அமைச்சரவை நியமனம், இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டால், அது அரசுக்குள் மேலும் பிளவை ஏற்படுத்தும் என்பதாலும், சர்வகட்சி இடைக்கால அரசமைக்கும் முயற்சி தோல்வி அடையக்கூடாது என்பதாலுமே புதிய அமைச்சரவை நியமனம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது.

அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்த ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் நேற்று அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கவிருந்தனர். ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா தேவி வன்னியாராச்சி, காமினி லொக்குகே, எஸ்.எம்.சந்திரசேன உட்பட மேலும் சிலருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவிருந்தன.

மக்கள் கோரிக்கைக்கு புறம்பாக அமைச்சரவை நியமிக்கப்படுமானால் டலஸ் அழகப்பெரும உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் சுயாதீனமாக செயற்படும் முடிவை எடுத்திருக்கக்கூடும். இதனைத் தடுப்பதும் ஒத்திவைப்பின் மற்றுமொரு நோக்கமாகும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-ய,44)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஏனைய கட்சிகளிடமும் ஆதரவு

## சஜித் அணி வியூகம்



கொழும்பு, ஏப். 12

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு, ஏனைய அரசியல் கட்சிகளிடமும் ஆதரவு கோரப்படவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக் கட்டமைப்பு மாற்றமே தமிழ் மக்களுக்கு அவசியம்

## யாழ். மாநகர முதல்வர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஏப். 12**

**சிங்கள மக்கள் ஆட்சி மாற்றத்தைக் கோராமல், ஆட்சிக் கட்டமைப்பை மாற்றக் கோரிப் போராடினால், அவர்களுடன் சேர்ந்து வீதி, வீதியாக இறங்கிப் போராட நாம் தயார் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளுக்குப் பதில் கிடைக்க வேண்டும். ஐரோப்பாவில் உள்ள நாடாக இருக்கட்டும், வட அமெரிக்க நாடுகளாக இருக்கட்டும் அனைத்து நாடுகளும் தங்களுடைய ஆட்சிக் கட்டமைப்பாக சமஷ்டியையே கொண்டுள்ளன. அதனால்தான் அவர்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றனர் என்பதை தென்னிலங்கை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து இங்கு பணம் வந்தால் உடனடியாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு போய் விசாரிக்கிறது. இவ்வாறு இருந்தால் எவ்வாறு வெளிநாட்டிலிருந்து பணம் இங்கு வரும்? எல்லாவற்றையும் இனவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்க முடியாது. ஏராளமான புலம்பெயர்ந்த மக்களையும் அமைப்புக்களையும் இலங்கையில் தடை செய்துள்ளனர். எவ்வாறு அவர்கள் இங்கு முதலிடுவார்கள்?

ஆட்சிக் கட்டமைப்பும் அரசியல் யாப்பும் மாற்றப்படவேண்டும். இனவாதச் செயற்பாடுகள் திருத்தப்படவேண்டும். சிங்கள சகோதரர்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து இனப் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டும். நான் பெரிது நீ பெரிது என்று தமிழ் அரசியல்வாதிகள் போராடுவதை விடுத்து எல்லோரும் சர்வதேச சமூகத்திடம் அல்லது சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களிடம் "இலங்கைக்கு நிதி உதவி செய்யப் போவதாக இருந்தால் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையை வழங்கிவிட்டுச் செய்யுங்கள்' என்ற கோரிக்கையை வையுங்கள் - என்றார். (எ-20,26)

## எகிறும் டொலர்

கொழும்பு, ஏப். 12

அமெரிக்க டொலர் நேற்று 330 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. பல அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில், அமெரிக்க டொலரின் விற்பனை விலை மேலும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## கட்டுநாயக்க ஊழியர்களும் போராட்டம்!

சம்பளம் மற்றும் முற்கொடுப்பனவு முரண்பாடுகளை முன்வைத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் பலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுக் காலை முதல் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்தப் போராட்டத்தால் விமான நிலையச் செயற்பாடுகள் பாதிக்கப்படவில்லை என்றும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பொருளாதார நெருக்கடியால் யாழ். அபிவிருத்தி பாதிப்பு!

### யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பொருள் விலையேற்றத்தால் மாநகரசபை தீர்மானித்திருந்த சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் நகரக் குளத்தைச் சீரமைக்க 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் அந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டால் இரு மடங்கு நிதி தேவையாக இருக்கும். மருத்துவமனை வீதி அகலிப்பு, ஸ்ரான்லி வீதி அகலிப்பு போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி மூலங்கள் உள்ள போதும், கட்டுமானப் பொருள் களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு , விலையுயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார நெருக்கடி போன்றவற்றால் கடந்த காலங்களில் வரவு- செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

நிதி மூலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, திட்டவரைவு இறுதி செய்யப்பட்டு ஆரம்பிக்கும் நிலையில் இருந்த பலவேலைத் திட்டங்களை, பொருளாதார நெருக்கடி காரணமாக ஒத்திவைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-26)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐ.ம.ச. எம்.பிக்கள் கையெழுத்து

கொழும்பு, ஏப். 12

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் என்று கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான குற்றப்பிரேரணை, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓவர் ஸ்பீட் உயிருக்கு ஆகாது. இப்பிடி கண்மூடித்தனமா லொறியை ஓடினதாலதான் நேற்று சத்திரத்துச் சந்தியில ஒரு ஏழு வயசுக் குழந்தை அநியாயமா நடுறோட்டில சாகவேண்டி வந்தது. முந்தநாள் அச்சுவேலி பெற்றோல் செற்றிலையும் இப்பிடி லொறி முன்னப் பின்ன பாக்காமல் மோதி வயசானவர் ஒருத்தர் அந்த இடத்திலேயே சரி. இப்பிடி லொறி, டிப்பர் எண்டு பெரும் வாகனங்கள் எல்லா இடமும் , மின்னல் மாதிரி ஓடித் திரியிறதால அடிக்கடி அக்சிடெண்ட்டும் அநியாய உயிரிழப்பும் இஞ்ச வாடிக்கையாப் போச்சுது.

ஆனால் இப்பிடி தாறுமாறா ஓடித் திரியிறதுக்கு உந்த வாகனங்களுக்கு பெர்மிசன் இல்லை. ஆகமிஞ்சினால், 40 கிலோமீற்றர் வேகத்திலதான் ஓடோணும். அதுதான் சட்டமும்கூட. அதோட எல்லா றோட்டுகளிலையும் உதுகளை ஓடவும் அனுமதியில்லை. இதுகளையெல்லாம் இப்ப பொலிஸ்காரர் பாக்கிறதேயில்லை. அதால உந்த டிப்பர் , லொறி எல்லாம் சின்னக் குச்சொழுங்கைக்குள்ள கூட 100 கிலோ மீற்றர் வேகத்திலகூட பறந்து திரிஞ்சு, முன்னால வாறவையை இடிச்சுத் தள்ளிக்கொண்டே இருக்குதுகள். லைசென்ஸ் இல்லாமல் மோட்டர் சைக்கிளில போறவையைப் பிடிச்சு பைன் அடிக்கிறதில காட்டுற அக்கறையில , ஒரு வீதத்தையாவது இந்த டிப்பர், லொறியளில காட்டினா இப்ப எத்தனையோ பேர் உயிரோட இருந்திருப்பினம். ஆனால் இப்பிடி டிப்பர், லொறியள் எல்லாம் கண்மூடித்தனமா திரியிறதுக்கே பொலிஸுக்கு புறிம்பா சப்போர்ட் பண்ணுகினமாம். அதாலதான் உதுகளை பொலிஸ்காரர் கண்டும் காணதது மாதிரி இருக்கினமாம்.

அதெல்லாம் சரி, இந்த டீசல் தட்டுப்பாட்டுக் காலத்திலை உந்த டிப்பர், லொறிகள் எல்லாம் ஓடுறதுக்கு எங்க இருந்து டீசல் கிடைக்குது? ஒருவேளை மணித்தியாலக் கணக்கில கியூவில நிண்டு அடிச்சிருக்கலாம். அப்பிடிக் கஷ்டப்பட்டு அடிச்ச டீசலில ஏன் இப்பிடி வெறிபிடிச்சமாதிரி இந்தக் காலத்தில ஓடவேணும். அதுக்கும் ஒரு காரணம் இருக்கு. இப்ப அடிக்கடி இரவில கரண்ட் கட் பண்ணுறதால எல்லா இடமும் ஒரே கும்மிருட்டு. அந்த இருட்டைப் பாவிச்சு கள்ளமண் அள்ளுற வேலை கன இடங்களில தாராளமா நடக்குது. அதுக்கும் இந்தக் காக்கிச்சட்டைக்காரர் தான் காவலாம்.

டிப்பர், லொறியள் பேய்த்தனமா ஓடுறதுக்கு முந்தியே கடிவாளம் போடவேண்டிய ஆக்களே அதுக்கு துணையா நிக்கிறதால தான் இப்பிடி நேற்று நடந்தமாதிரி அநியாயச் சாவுகள் இஞ்ச தொடருது. இனியாவது காக்கிமார் கொஞ்சம் அக்கறை காட்டுவினமோ?



- பட்சி

# புத்தாண்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## வர்த்தக அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 12**

**எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மக்களுக்குத் தேவையான பொருள்களைத் தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.**

மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. அவை மக்களுக்கு விநியோகிக்கப்படும். அதேவேளை இந்தியக் கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சதொச மூலம் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டரிசி ஒரு கிலோ 110 ரூபாவுக்கும், சம்பா அரிசி ஒரு கிலோ 130 ரூபாவுக்கும் சதொச மூலம் விற்பனை செய்யப்படும் என்று வர்த்தக அமைச்சின் செயலாளர் ஹர்ஷனி ஜயவர்தன தெரிவித்துள்ளார். (க-இ)



புத்தாண்டுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்ய, சாவகச்சேரி சதொச விற்பனை நிலையத்துக்கு முன்னால் மக்கள் கொட்டும் மழையிலும் நீண்ட வரிசையில் நேற்றுக் காத்திருந்தனர். (க-9)

## சோபை இழந்தது புத்தாண்டு வியாபாரம்

மன்னார், ஏப். 12

நாட்டின் தற்போதுள்ள நிலைமை காரணமாக புத்தாண்டு வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை மற்றும் விலையுயர்வு என்பவற்றால் மக்கள் புத்தாண்டுக் கொள்வனவுகளில் நாட்டம் காண்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் நாட்டில் தற்போது அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களாலும் புத்தாண்டு வியாபாரம் சோபை இழந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-213)

## பளைப் பகுதியில் கோயிலில் திருட்டு

பளை, ஏப். 12

பளை ஆனைவிழுந்தானிலுள்ள கோயிலிலுக்குள் உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வழிபாட்டுக்காக கோவிலைத் திறந்தபோது அங்குள்ள பெறுமதிமிக்க பொருள்கள் திருடு போயுள்ளதை அவதானித்த மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-யு-9)





# புதிய சிறுவர் பூங்கா பண்டத்தரிப்பில் திறப்பு


யாழ்ப்பாணம், ஏப்.12

வலி.தென்மேற்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் சிறுவர் பூங்கா ஒன்று நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், நாடா வெட்டி பூங்காவை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

விருந்தினர்கள் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்தப் பூங்காவுக்கான காணி சமாதான நீதிவான் கணபதிப்பிள்ளை கந்தாசாமியால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், சமாதான நீதிவான் கணபதிப்பிள்ளை கந்தசாமி, மன்னார் மாவட்ட முன்னாள் செயலர் கிறிஸ்தோபர் அன்ரன் மோகன் றாஸ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திருமதி மலர்விழி குணபாலன், வலி. தென்மேற்கு தவிசாளர் ஜெபநேசன், வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் தர்சன், வலி தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள், வலி தென்மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-125)



## நன்னீராட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமையப் பெற்ற மங்களநாதர் திருக்கோவில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா நேற்று இடம் பெற்றது.

இதில் பேரூர் ஆதீன சாந்தலிங்க மருதாசல அடிகளார், தருமபுரம் ஆதீன திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள், தென்கயிலை ஆதீன குருமுதல்வர், சிவகுரு ஆதீன குருமுதல்வர் மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-26)

## கொட்டும் மழையிலும் பொங்கல் உற்சவம்

சாவகச்சேரி,ஏப்.12

கொட்டும் மழையிலும் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம், தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கோவில்களில் நேற்று இடம்பெற்றன.

காவடிகள், பாற்செம்புகள் மற்றும் பறவைக் காவடிகள் போன்ற நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றிய அடியார்கள், மழைக்கு மத்தியிலும் குடைகளைப் பிடித்தவாறு பொங்கலிட்டுப் படைத்து வழிபாடு செய்தனர். (க-9)



வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் இறுதி உற்சவம் நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. அம்மன் ஐந்து தலை நாகபாம்பு வாகனத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (க-27,131)

### மழைக்குப் பின்

## குளத்தின் நீர் மட்டத்துக்கேற்ப உப உணவுப் பயிர்ச் செய்கை

முல்லைத்தீவு, ஏப். 12

தற்போது பெய்துவரும் மழைக்குப் பின்னர், வவுனிக் குளத்தின் நீர்மட்டத்துக்கேற்ப உப உணவு பயிர்ச் செய்கை தீர்மானிக்கப்படும் என்று வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டு தற்போது பெய்துவரும் மழையின் பின்னர் குளத்தின் நீர் நிலைவரத்துக்கேற்றவாறு தீர்மானிக்கப்படும். உப உணவுப் பயிர்ச் செய்கை இலாபம் தரும் பயிர்ச் செய்கையாக உள்ளதன் காரணமாக, விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் அக்கறை செலுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தாயகத்தில்
# இனப்பிரச்சினைக்கு பொதுவாக்கெடுப்பு!
### தமிழகத்திலுள்ள தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து


சென்னை, ஏப். 12

**இலங்கையில் தமிழின அழிப்பை மேற்கொண்ட கோத்தாபய உட்பட சிங்கள ஆட்சித் தலைமைகள் மற்றும் படைத்தலைமைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும். தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் -இவ்வாறு தமிழகத்திலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.**

ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற, 'ஈழத் தமிழர்க்கு விடியல்' எனும் மாநாட்டில், கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டு 16 கோரிக்கைகள் அடங்கிய தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இனவழிப்புக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மேற்கொண்டவர்களை, 2022ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதிக்கு முன்னர் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்ற வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு எதிராக செய்யப்பட்ட சட்டமீறல்கள் தொடர்பில் காலந்தாழ்த்தாமல் சர்வதேசப் புலனாய்வுக்கு வழிசெய்ய வேண்டும் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஈழத் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு காணவேண்டும். தொடர்ந்து நடைபெற்றுவரும் இனவழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேசப் பாதுகாப்புப் பொறியமைவை ஏற்படுத்தவேண்டும். இலங்கையில் போர்க் குற்றங்கள் செய்தவர்கள் மீது ஐ.நா. உறுப்பு நாடுகள் எல்லை கடந்த மேலுரிமைக் கோட்பாடுகளின்படி அந்தந்த நாட்டு நீதிமன்றங்களிலும், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்தல், பயணத்தடை விதித்தல், சொத்துகளை முடக்குதல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழர் தாயகப் பகுதியை ஆக்கிரமிக்கும் சிங்களப் பெரும்படை உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கு வழிசெய்ய சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறியமைவை ஏற்படுத்த வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதும் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழர்களின் வரலாற்று மரபுவழித் தாயகம் என்பதை ஏற்று வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து குடியியல் ஆட்சியை அங்கு நிறுவும் வகையில் தேர்தல் நடத்தப்படவேண்டும். தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற கொள்கைகளுக்கு முரணான தீர்வு எதையும் இந்திய அரசு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமிழர்கள் மீது திணிக்கக் கூடாது -என்றுள்ளது. (கு-7)



## எரியூட்டப்பட்ட நிலையில் மோட்டார்சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

ஆவரங்கால் மேற்குப் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் எரியூட்டப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

ஏன் அந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது? எதற்காக எரியூட்டப்பட்டது? என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ய-23)

## தப்பியோடியவர் மீண்டும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 12

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் தெற்குப் பகுதியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோடிய நிலையில் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

70 மில்லிகிராம் ஹெரோய்ன் வைத்திருந்தார் என அண்மையில் தெல்லிப்பழை பொலிஸார் குறித்த இளைஞரை கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்திருந்தவேளை பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகநபர் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## ஐஸுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 12

நெடுந்தீவில் ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நெடுந்தீவுக் கடலில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் கொடிகாமத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர், நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-27)

## உறக்கத்துக்கு சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்!

கொடிகாமம், ஏப். 12

இரவு உறக்கத்துக்குச் சென்ற பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை, சாவகச்சேரி நுணாவில் மத்தியில் நடந்துள்ளது. நுணாவில் மத்தி சாவகச்சேரியை சேர்ந்த துசானி (வயது 39) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். திடீர் இறப்பு விசாரணையை தென்மராட்சி பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மேற்கொண்டார். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ நிபுணர் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டார். மேலதிக பரிசோதனைகளுக்காக உடற் கூறுகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம-எ-159)

## இரு ரயில்கள் மோதி விபத்து




நிறுத்தப்பட்டிருந்த ரயிலுடன், பயணிகளுடன் சென்ற ரயில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் ரயிலில் இருந்த பெருமளவு டீசல் கசிந்துள்ளது. இந்த விபத்து ரம்புக்கன ரயில் நிலையத்தில் நேற்று நடந்துள்ளது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த டீசல் ஏற்றிச் செல்லும் ரயிலுடன், பயணிகளை ஏற்றி வந்த மற்றொரு ரயில் மோதி விபத்துக்குள்ளாகியது. பயணிகளை [illegible] ரயிலே மற்றொரு ரயிலுடன் மோதியுள்ளது. (க-இ)

## பாம்பு தீண்டிய 9 வயதுச் சிறுமி மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஏப். 12

9 வயதுச் சிறுமியொருவர் பாம்பால் தீண்டப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சிறுமியே இவ்வாறு பாம்பால் தீண்டப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-9)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஏப். 12

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம், முன்னால் சென்ற சைக்கிளை மோதியதில் 57 வயது குடும்பத் தலைவர் காயமடைந்தார்.

இந்த விபத்து [illegible] மருத்துவமனைக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. [illegible] தவசிகுளத்தைச் சேர்ந்தவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (கு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்




மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு எதிர்வரும் 14.04.2022 வியாழக்கிழமை அன்று பிறக்கிறது. குரு வாரத்தில், குரு பகவான் தன் சொந்த வீடான மீன ராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது. சுபகிருது என்றாலே நற்செய்கை என்று பொருள். சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபிட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

## இடபம்



ரிஷப ராசிக்கு இந்தாண்டு குரு மற்றும் சனி நற்பலனைத் தரக்கூடிய நிலையிலும், ராகு கேது சுமாரான பலன்கள் தரக்கூடியவராக இருப்பார்கள். ரிஷபம் லக்கினமாக அமைவதோடு, ஆண்டு பிறக்கும்போது ராசி நாதன் சுக்கிரன் ராசிக்கு 10ம் இடமான கர்ம ஸ்தானத்தில் செவ்வாயுடன் இருப்பதும், அவரின் பார்வை பெறுவதும் சிறப்பானதாக இருக்கும். வீடு, மனை, நிலம் ஆகிவற்றை அருளக்கூடிய செவ்வாயின் அற்புத பலன் உங்களுக்கு கிடைக்கிறது. அவரோடு சுக்கிரன் சேர்ந்திருப்பதால் சசி மங்கள யோகம் உண்டாவதால், வீடு, மனை அல்லது சொத்து வாங்கும் முயற்சியில் இருப்பவர்களுக்குச் சாதகமான காலமாக இருக்கும்.

**தொழில் :** உங்கள் ராசிக்கு 10ஆம் வீடான கர்ம, தொழில் ஸ்தானத்தில் ராசி நாதன் இருப்பதோடு, குரு 11ல் லாப ஸ்தானத்திலும், கர்ம காரகன் சனி 9ல் சஞ்சரிப்பது என இந்த வருடம் உங்களுக்கு தொழில், வியாபார ரீதியாக மிகவும் அற்புத பலனைத் தரக்கூடிய அமைப்பாக இருக்கும். தொழில் ரீதியாக நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும், முதலீடுகளுக்கும் நல்ல பலனைத் தரக்கூடியதாக இருக்கும்.

**உத்தியோகம் :** உத்தியோகத்தில் ஏற்றம் பெறக்கூடிய ஆண்டாக இருக்கும். மேலதிகாரிகளுடன் நல்ல நெருக்கமும், ஆதரவும் ஏற்படும். புதிய வேலைக்கு முயல்பவர்களுக்கு விரும்பிய வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

**குடும்பம் :** உத்தியோகம், தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். அதனால் உங்களின் சேமிப்பு உயரும். அதனால் புதிய விஷயங்களில் முதலீடு செய்வீர்கள். ராசிக்கு 7ம் இடத்தில் குருவின் பார்வை விழுவதால் கணவன் – மனைவி ஒற்றுமை, அந்நியோன்னியம் அதிகரிக்கும். குழந்தைப் பாக்கியம் ஏற்படும். திருமணம், சுபகாரிய பாக்கியம் உண்டாகும். சுபவிரயங்கள் ஏற்படும். கடன் தொல்லை தீரும். நிதி தொடர்பான பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும்.

சனிபகவானின் அதிசார பெயர்ச்சி ஏப்ரல் 29 முதல் ஜுலை 12ஆம் திகதி வரை ராசிக்கு 10ம் இடமான கர்ம, தொழில் ஸ்தானமான கும்ப ராசியில் சஞ்சரிப்பதோடு, 2023 ஜனவரி மாதம் சனி கும்ப ராசிக்கு முறையான

### குரு, சனியால் யோகம் பெறும் ராசி

பெயர்ச்சியும் நிகழ உள்ளது. கர்ம ஸ்தானத்தில், கர்மாதிபதியின் சஞ்சாரம் நிகழ்வதால் இந்தாண்டு முழுவதும் வேலை, தொழில் தொடர்பான மிகவும் அற்புத பலனைப் பெறக்கூடிய ஆண்டாக இந்தப் புத்தாண்டு இருக்கும்.

**கல்வி:** புதன் பகவான், குருவின் பார்வை சிறப்பாக இருப்பதால் மாணவர்களுக்குக் கல்வி தொடர்பான முன்னேற்றத்தைத் தரக்கூடியதாக இருக்கும். நல்ல ஞாபகத் திறனும், தேர்வில் நல்ல மதிப்பெண் பெறவும் வாய்ப்புள்ளது. மேற்படிப்பு படிக்க நினைப்பவர்களுக்கு சாதகமான சூழல் அமையும்.

**வழிபாடு:** சிவாலய வழிபாடு செய்யவும். வெள்ளிக்கிழமைகளில் துர்க்கை அம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாடு செய்வது நல்லது.

## குருப்பெயர்ச்சி பலன்கள்

**சுப கிரகமான அதிசார குரு பெயர்ச்சி ஏப்ரல் 14ம் திகதி கும்பத்திலிருந்து மீன ராசிக்கு நிகழ உள்ளது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**




எண்ணுவதை சிந்தனையை எழுத்தில் வடிப்பதில் வல்லவரான ரிஷப ராசி அன்பர்களே! இதுவரையிலும் 10 ஆம் இடத்தில் அமர்ந்து பலன் தந்தார் குருபகவான். எதிலும் தீர்க்கமானதொரு முடிவு எடுக்க முடியாமல் தவிக்க வைத்தார். 14.4.2022 முதல் 22.4.2023 வரை, இலாப வீட்டில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார்.

நீங்கள் என்னென்ன வேலைகளை எல்லாம் திட்டமிட்டிருந்தீர்களோ, அவை மிகச் சிறப்பாக நடந்தேறும். பணப்பற்றாக்குறையால் தவித்த நிலைமாறும். தேவைக்கேற்ப பணம் வந்து சேரும். கடன் தொகையில் ஒரு பகுதியைப் வசூலிப்பீர்கள். தம்பதிக்கு இடையே அந்நியோன்யம் பிறக்கும். குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கி நிம்மதி பிறக்கும்.

குடும்பத்துடன் சென்று உங்களின் குலதெய்வ வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள். உங்களை வாட்டிவதைத்த பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்; புதிய அணுகுமுறையில் பிரச்சினைகளைச் சந்தித்து தீர்வு காண்பீர்கள். பிரமுகர்களின் நட்பும் உதவியும் வாய்க்கும். தக்க தருணத்தில் வங்கிக் கடனுதவி கிடைக்கும். வீடு கட்டும் பணியை மீண்டும் தொடங்குவீர்கள். தடைகள் நீங்கி திருமணம் கைகூடும். புதுவேலைக்கான முயற்சிகளில் நல்ல தகவல் வந்து சேரும். புதிய பதவி மற்றும் பொறுப்புகளுக்குத் தேர்வு செய்யப்படுவீர்கள்.

**14.4.2022 முதல் 29.4.2022 வரை**

இந்தக் காலகட்டத்தில், உங்களுக்கு அஷ்டம லாபாதிபதியான குருபகவான், தன் நட்சத்திரத்திரமான பூரட்டாதி 4ம் பாதத்தில் செல்கிறார். இந்தக் காலகட்டத்தில் திடீர்ப் பயணங்கள் ஏற்படலாம். அதேபோல் செலவுகளும் சகோதரருடன் மனத்தாங்கலும் ஏற்பட வாய்ப்பு உண்டு. அரசாங்கம் தொடர்பான காரியங்களில் அலட்சியம் காட்டாதீர்கள்.

**30.4.2022 முதல் 24.2.2023 வரை**

இந்தக் காலக்கட்டங்களில் உங்களின் பாக்கிய ஜீவனாதிபதியான சனி பகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் செல்கிறார் குரு. தேக ஆரோக்கியம் மேம்படும்; பணவரவு உண்டு. வேலை கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். சொந்த வீடு அமையும். புதுத் தொழில் தொடங்குவீர்கள். 8.8.2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குருபகவான் வக்ரத்தில் செல்வதால், எதிர்பார்த்த பணம் கைக்கு வந்தாலும் செலவுகள் கூடும். உடல் ஆரோக்யத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**24.2.2023 முதல் 22.4.2023 வரை**

உங்கள் தன, பூர்வ புண்ணியாதிபதியான புதனின் ரேவதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் யோகம் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதி கிடைக்கும். திடீர் பணவரவு உண்டு. சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள்.

**மொத்தத்தில் இந்தக் குருப்பெயர்ச்சி எதிர்பாராத திடீர் முன்னேற்றத்தையும் அதிரடி வளர்ச்சியையும் அள்ளித் தருவதாக அமையும்.**

## உண்மையை அறிக்கையிடுவோம்




இயேசு பேதுருவைப் பார்த்து எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன் என்றார். (யோவா: 13:38)

பேதுரு தலைமைக்குருவின் வீட்டு முற்றத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்த போது 'இவன் நசரேத்து இயேசுவோடு இருந்தவன் தானே?' என்ற கேள்விக்கு "இந்த மனிதனை எனக்குத் தெரியாது" என்று அப்பட்டமாக மறுதலித்தார். "என்னைப் பின் செல்", "இந்தப் பாறையின் மேல் திரு அவையைக் கட்டுவேன்", "உன்னை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்" "விண்ணகத்தின் திறவுகோல்களை வழங்குவேன்" என இயேசுவால் அழைக்கப்பட்டு அவரோடு வாழ்ந்து போதனைகளைக் கேட்டு அருங்குறிகளைக் கண்ட சீடன் மறுதலிக்கிறார். இது தன்னைத் தற்காத்து இயேசுவின் இறுதிப்பயணம்வரை தொடரவேண்டுமென்ற ஆதங்க மறுதலிப்பாகும்.

எமது சுயநலத்துக்காக வறட்டுக் கௌரவத்துக்காக குறுக்குவழி உயர்வுகளுக்காக பல மறுதலிப்புகளில் ஈடுபடுகிறோம். பெற்றோரை, நண்பர்களை, சொந்த ஊரை, மதத்தை, இனத்தை மொழியை மறுதலிக்கின்றோம். இவை இறைவனுக்கு எதிரான மறுப்புரைகளே.

எம்மைத் தற்காத்துக்கொள்ள எமது தனித்துவத்தை அடையாளத்தை உறவுகளை நாம் சார்ந்த மதங்களை மறுதலிக்கும் மனப்பாங்கை மாற்றிக் கொள்வோம். உண்மையையும் நீதியையும் இறைபற்றையும் உறுதியுடன் அறிக்கையிட்டு சான்றுபகர்வோம்

**யே.சுபீட்சன்**, கொழும்புத்துறை

## நம்பிக்கையில்லாப் பிரரேணை வாசுதேவ தரப்பு பின்னடிப்பு!

கொழும்பு, ஏப்.12

அரசாங்கத்தை வீழ்த்துவதே எமது பிரதான இலக்காக உள்ளது. அவ்வாறான நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதால் பயனில்லை என இடதுசாரியின் தலைவர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கத்தை வீழ்த்துவதே எமது பிரதான இலக்காக உள்ளது. அவ்வாறான நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதால் பயனில்லை.

ஆளும் தரப்பில் உள்ளவர்களில் இன்னமும் ஐந்தாறு பேரை எம்முடன் இணைத்துக் கொண்டால் அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்து விடும். ஆகவே அதற்கான முயற்சிகளையே மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அரசாங்கம் பெரும்பான்மையை இழக்கின்ற தருணத்தில் புதிய பிரதமர் தலைமையில் 'தேசிய நிறைவேற்று சபை' நிறுவப்பட்டு அனைத்துத் தரப்பினரும் அதில் பங்கேற்க வேண்டும்.



அந்த தற்காலிக கட்டமைப்பு ஊடாக பொருளாதார மீட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியும். அதைத் தவிர்த்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதால் எவ்விதமான பயனுமில்லை. இந்த விடயத்தை நான் உள்ளிட்ட எமது தரப்பினர் சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவார்களாயின், அதற்கு எம்மால் ஆதரவளிக்க முடியாது. ஆகவே அதுதொடர்பில் எமக்குள் கலந்துரையாடல்களைச் செய்து இறுதி முடிவை எடுப்போம்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நெருங்கி வரும் இன்னொரு பேராபத்து

இலங்கையை நெருக்கடிகள் சூழ்ந்து மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன அதிகாரத்தில் இருப்பவர்களின் பதவி மோகத்தால். அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால் நாடு எதிர்கொள்ளவுள்ள ஒரு பெரும் அபாய நிலைமை தொடர்பில் எவரும் கரிசனை கொள்ளாதிருக்கின்றனர்.

அண்மைய நாள்களாக இலங்கையின் சுகாதாரத் துறையினர் மீண்டும், மீண்டும் ஓர் எச்சரிக்கையைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்புகள் சீர்குலையும் அபாய எல்லையைத் தொட்டிருக்கின்றன என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அரசாங்கமோ, தொடர்புடைய அமைச்சோ இதுவரை எந்தவொரு கருத்தையும் தெரிவிக்காதிருக்கின்றன.

இலங்கையின் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் இறக்குமதிகள் தடைப்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் மருந்துப் பொருள்களின் இறக்குமதியும் தடைப்பட்டிருக்கின்றது. மிக அத்தியாவசியத் தேவையான மருந்துகள் தொடர்பில், அவற்றின் கையிருப்புக்கள் தொடர்பில் அரசாங்கம் முதன்மைப்படுத்திச் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், தற்போதுள்ள ராஜபக்ச அரசு ஏனையவற்றைப் போன்று இதிலும் கோட்டைவிட்டிருக்கும் நிலையில் இப்போது மருத்துவமனைகளின் அன்றாடச் செயற்பாடுகள் ஆட்டம்காண ஆரம்பித்திருக்கின்றன.

அரசாங்க மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் அன்றாடம் தேவையான மருந்து வகைகள், சிகிச்சை உபகரணங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது என்று கடந்த மாதத்தின் மத்தியில் இருந்தே எச்சரிக்கைக் குரல்கள் வெளிப்பட ஆரம்பித்திருந்தன. அதை அரசாங்கம் கவனத்தில் எடுக்காத நிலையில், இப்போது மருத்துவமனைகளில் சிகிச்சைகளை நிறுத்தும் அளவுக்கு இந்தப் பற்றாக்குறை விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.


நாட்டிலுள்ள பல மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறையால் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மிக அவசியமானதாகக் கருதப்படும் சத்திர சிகிச்சைகளே முன்னெடுக்கப்படுகின்றன. மறுபுறத்தில் சமீபத்தில் பிறந்த சிசுக்கள், கைக்குழந்தைகளின் சுவாசத்துக்கான எண்டோட்ரஷியல் குழாய்கள் நாடளாவிய ரீதியில் இல்லை என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். விதிமுறைகளை மீறி இந்தக் குழாய்களை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்த வேண்டியுள்ளது என்று கூறும் மருத்துவர்கள், அது மிகவும் தவறானது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். இதேநேரம் நாட்டில் பல மருந்து வகைகளை நோயாளர்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருக்கும் மருந்துகளின் விலையும் பல மடங்கு அதிகரித்திருக்கின்றது.

இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதைக் கற்பனையில்கூட சிந்திக்க முடியாதிருக்கின்றது. இப்போது நாடு உள்ள நிலைமையில் சுகாதாரத் துறையின் கட்டமைப்புச் சிதைந்தால் அது பேரழிவுகளையே ஏற்படுத்தும். போர் இடம்பெற்றபோதும், கொரோனாத் தொற்றுக் காலத்திலும் ஏற்பட்ட இறப்புக்களை விடவும் மிகப் பெரிய உயிர் அழிவுகள் ஏற்படும் என்று சுகாதாரத்துறை எச்சரிக்கின்றது.

சுகாதாரத் துறையினரின் எச்சரிக்கைகளை அரசாங்கம் காது கொடுத்துக் கேட்பதைப்போன்று தெரியவில்லை. சுகாதாரத்துறையின் செயலிழப்பு இன்னமும் நேரடியாக மக்களால் உணரப்படாததால், அரசாங்கம் எரிபொருள், எரிவாயு போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அதிகாரத்தைத் தக்கவைப்பதிலுமே தீவிர கவனம் செலுத்துகின்றது. முன்னைய காலங்களில் அரசாங்கம் இவ்வாறு முன்யோசனையற்ற முறையில் செயற்பட்டதன் பயன்களையே மக்கள் இப்போது அனுபவிக்கின்றனர். இப்போது சுகாதார விடயத்தில் அரசாங்கம் காட்டும் மெத்தனப்போக்கின் பெருவிளைவுகள் இன்னும் சிறிது காலத்தில் வெடிக்கும். அது நாடு எதிர்கொள்ள முடியாத அளவுக்கு இருக்கும் என்பதே உண்மை.

நாளொரு நல்வார்த்தை

"பணிவு வேண்டும், ஆனால் கோழைத் தனம் கூடாது. துணிவு வேண்டும், ஆனால் தலைக்கனம் கூடாது" - சோக்ரட்டீஸ்



# பண்டிகைக் காலத்தில் எரிபொருள் சிக்கனம்!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்து

**கொழும்பு, ஏப். 12**

**பண்டிகைக் காலத்தில் எரிபொருள்களை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க அறிவுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையான அளவு எரிபொருள் நாட்டுக்குக் கிடைத்துள்ளது. 2 லட்சத்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள்களை இந்த மாதத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் தேவையற்ற வகையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒன்றுகூடவேண்டாம். கொள்கலன்களில் எரிபொருள் விநியோகிப்பதுபற்றி எதிர்காலத்தில் ஒழுங்குவிதி ஏற்படுத்தப்படும். வீடுகளிலும் வேறு இடங்களிலும் சட்டவிரோதமாகச் சேமித்து வைக்கப்படும் டீசல், பெற்றோல் போன்ற எரிபொருள்களால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இது ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலைமை - என்றார்.

(க-இ)

வடமாகாண

## நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிப்பு

வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றும் நேற்றுமுன்தினமும் எரிபொருள்கள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

புத்தாண்டுக் காலத்தில் எரிபொருளுக்கான கேள்வி மக்களிடம் அதிகரித்துள்ளது. இதனால் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பெற்றோலுக்கு சிறிய தட்டுப்பாடொன்று ஏற்பட்டது. மக்கள் பெற்றோலுக்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் நேற்றும், நேற்றுமுன்தினமும் வடமாகாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன், தேவையான அளவு எரிபொருள் சுழற்சி முறையில் வழங்கப்படும் என்றும் மக்கள் தேவைக்கும் அதிகமாகக் கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம)

## பங்கீட்டு அட்டைகளுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு தலா 2 லீற்றர் என்ற அடிப்படையில் இந்த மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறுகின்றது. (ம-17)

நாளை 13.04.2022 புதன்கிழமை பங்குனி 30

சுபநேரம் : 04.36 - 06.06

ராகுகாலம்: 12.06 - 01.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோத்தாபயவின்...

மான நடவடிக்கை அல்ல என்று தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச, மீண்டும் உர மானியத்தை வழங்கத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு அவர் நேற்று ஆற்றிய விசேட உரையில்,

இன்று நாம் முகங்கொடுத்துள்ள நெருக்கடியை வெற்றி கொள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். நாட்டை மீட்டெடுக்கவே ஜனாதிபதியும், அரசும் ஒவ்வொரு நிமிடத்தையும் செலவிட்டு வருகிறது. வரலாற்றில் விவசாயிகளுக்கு அதிக சலுகைகளை வழங்கிய எமக்கு தற்போது விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். என்னதான் நாட்டுக்கு நல்லது என்றாலும் சேதனப் பசளை வேலைத்திட்டத்தைக்கொண்டு செல்ல இது சரியான தருணம் அல்ல. அதனால் நாம் மீண்டும் உர மானியத்தை வழங்கத் தீர்மானித்துள்ளோம். தாங்கிக்கொள்ள முடியாத வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு போன்று, கடதாசி பற்றாக்குறை வரை முகங்கொடுத்து வருகின்ற இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். இரண்டு மூன்று நாள்களில் முடியாவிடினும் கூடிய விரைவில் இந்த நெருக்கடிக்கு இட்டுச்செல்லும் பாதையை முடிவுக்கு கொண்டுவர நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்- என்றார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது. இதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்படும்போது அதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் இணங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### பதவியில்...

போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பதவி விலகமாட்டோம் என்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் சூசமாகக் குறிப்பிட்டுள்ளார்.

'அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என நாம் சகல கட்சிகளுக்கும் அழைப்புவிடுத்தோம். ஆனால் வரவில்லை. இந்தத்தருணத்தில் கட்சி குறித்து சிந்திப்பதைவிட நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே நம் அனைவரதும் பொறுப்பாகும். யார் பொறுப்பை ஏற்காவிடினும் ஆட்சியிலுள்ள கட்சி என்ற வகையில் நாம் அந்த இறுதிப் பொறுப்பை ஏற்க வேண்டும். நாம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம்' என்று தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

### போர்...

ராஜபக்ச தரப்பினர் உரையாற்றும்போது போர் வெற்றி தொடர்பிலும் பிரஸ்தாபிப்பது வழக்கம். பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றைய தனது உரையிலும் போர் வெற்றி விடயங்களை நினைவுபடுத்தினார்.

'30 ஆண்டுகால பயங்கரவாத அச்சுறுத்தலை இல்லாதொழித்து, இந்நாட்டு மக்களின் மனதில் இருந்த பயத்தை அகற்றியது. இதுபோன்ற துன்பத்தில் மக்களை தள்ளுவதற்காக அல்ல. மக்களாகிய உங்களை வரிசையில் நிறுத்துவதற்காக நாம் வீதிகளையும், அதிவேக நெடுஞ்சாலைகளையும் அமைக்கவில்லை. எண்ணெய்க் கப்பல்களை தடுத்து நிறுத்தி வைப்பதற்காக துறைமுகங்களை நாம் அமைக்கவில்லை' என்று குறிப்பிட்டார்.

இளையோரே,உங்கள் எதிர்ப்பு போராட்டங்களில் தேசியக் கொடியை வைத்திருப்பதை நான் காண்கிறேன். நாம் பிறந்த இந்தப் பூமியில் எந்தவொரு இடத்துக்கும் தேசியக்கொடியை கொண்டு சென்று ஏற்றி வைப்பதற்கான நாட்டை நாம் உருவாக்கி கொடுத்தோம். அன்று அந்த சவால்களுக்கு முகங்கொடுத்த தைரியமும் துணிச்சலும் இன்றும் எமக்கு உள்ளது என்றும் தெரிவித்தார். (அ-ஒ-5)

### அவமானப்படுத்துகிறீர்கள்...

பாத யாத்திரை செல்லும்போது கால்களில் குத்திய மணல் கற்களைவிட அதிகமாக என்மீதும் எனது குடும்பத்தினர் மீதுமான அவமானங்களை இன்று நான் சந்திக்கிறேன். அவற்றை என்னால் தாங்கிக் கொள்ள முடியும். எனினும், நாட்டுக்காக சேவையாற்றும் முப்படையினரையும், பொலிஸ் சேவையில் ஈடுபடுபவர்களையும் அவமதிக்காதீர்கள். இன்று நீங்கள் சுதந்திரமாக பயமில்லாமல் வீதிகளில் பயணிப்பதும், எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுவதும் இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்து நாட்டை காப்பாற்றியமையினாலேயே ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோன்று கொரோனாத் தொற்றிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்கும் இந்த இராணுவத்தினர் போராடினார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்' என்று மஹிந்த தனது உரையில் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

### போராடும்...

லாது போகின்றது. மிகப்பெரிய மறுசீரமைப்பைச் செய்வதற்கு முதல் தேசத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த அழிவிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அதற்கு பலமுள்ள தைரியமுள்ள அனைவருக்கும் நாம் ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளோம். உங்கள் அனைவரதும் பொறுமையும் தைரியமும் இந்தச்சந்தர்ப்பத்தில் நாட்டுக்குத் தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

### சுயாதீன...

ளுமன்ற உறுப்பினர்கள் 'பல்டி' அடித்துள்ளனர். அவர்கள் மீண்டும் அரச தரப்புடன் இணைந்துள்ளதுடன் ஒருவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

அரச பங்காளிக்கட்சியாக செயற்பட்ட சுதந்திரக்கட்சி கடந்த 5 ஆம் திகதி அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது. கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையில் சுயாதீனமாக செயற்படுவார்கள் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே 14 பேர் அணியில் இடம்பெற்ற ஒருவர் தற்போது அரசுக்கு ஆதரவை தெரிவித்து, இராஜாங்க அமைச்சு பதவியை பெற்றுள்ளார். ராஜபக்ச குடும்ப உறுப்பினரான ஷசீந்திர ராஜபக்ச பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சாந்த பண்டார உள்வாங்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரத்னவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்கவில்லை. அவர் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரை நேற்று நேரில் சந்தித்த பின்னர், அரசுடன் இணைந்து செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இதனால் சுயாதீன அணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 ஆகக் குறைந்துள்ளது. (அ-ஒ-5)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 20 . 10 . 1973

மண்ணின் மடியில் 27 . 02 . 2022



## சதாசிவம் சிவராசன்

அன்புடனே பண்பு பல பேசி
அனைவரையும் அரவணைத்து உதவி பல புரிந்து
அவனியிலே எல்லோர்க்கும் இனியவனாய்
அறம் பல இயற்றி அன்னைக்கு முதல் மகனாய்
பண்புள்ள பெருந்தகையாய் பவனி வந்தீர்!
உடன் பிறந்தார்க்கு இனிய சக உதிரமாய்
தோளோடு தோள் சேர்த்தீர்!
எல்லோர்க்கும் நல்லவனாய்
நன்மை பல சேர்த்து நன்னெறியில் ...
வாழ்ந்து காட்டிய அன்புருவே...!
எங்கு சென்றீர்... சடுதியாய் மறைந்துவிட்டீர்.
நித்தம் நித்தம் உனை நினைந்து ஏங்குகின்றோம்
வாரீரோ எங்கள் கண்ணீர் துடைக்க..
தாரீரோ நல் வார்த்தை - செவிகுளிர...!
ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமான் சமேத
சௌந்தராம்பிகை பாத நிழலில் சரணடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

859/3, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
தொ.பே.இல.:021 222 9896

(CS 44075) 1-6

### கொட்டும்...

கவும் தொடர்ந்தது. நேற்றைய நாளும் பல்வேறு தரப்பினர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி செயலகம் முன்பாகவும் போராட்டம் நடத்தப்பட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வீடு செல்லும் வரையில், போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என்ற முடிவுடன், காலிமுகத் திடலில் தங்கியிருந்து போராட்டக்காரர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 9ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவுவதற்காக நேற்றும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மருத்துவ சிகிச்சைக்கான கூடாரங்களும் அமைக்கப்பட்டன. தன்னார்வலர்களால் நேற்றும் போராட்டக்காரர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. (அ-ஒ-5)

### ராஜபக்ச...

பயவுக்கு ஆதரவான பேரணியும் நடத்தப்பட்டது. இதனால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது. ஆதரவான குழுவினருக்கும் எதிரான குழுவினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டது. எனினும், பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் குழுவினரே, ஜனாதிபதி கோத்தாபயவுக்கு ஆதரவான பேரணியை முன்னெடுத்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினரும் இன்னும் சில குழுவினரும் இணைந்து அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனிடையே, பொதுஜன பெரமுனவின் குழுவினர் நின்றிருந்த பக்கத்தை நோக்கி கல்வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனால், அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர் என அறியமுடிகின்றது. இந்த கல்வீச்சு தாக்குதல்களில் இரண்டு வாகனங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

### காலிமுகத்திடலில்...

முகத்திடல் மூன்றாவது நாளாகவும் நேற்றுப் போராட்டம் தொடரும் நிலையில், அந்தப் பகுதிக்கு 'கோத்தா கோ கிராமம்' என்று மும்மொழிகளிலும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கூகுள் வழிகாட்டலிலும் அந்த பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகும்வரை போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், காலி முகத்திடல் வளாகத்தில் தற்காலிக கூடாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கூடாரங்கள் அமைந்துள்ள பகுதிக்கே 'கோத்தா கோ கிராமம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மாணவர்களுக்கு நன்மை ஏற்படும். உங்களின் பேச்சினால் லாபம் வரும். மகிழ்ச்சியான சந்திப்புகள் நடைபெறும். கலகலப்பான நாள். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள்.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாளாக மனதில் நினைத்து வந்ததை இன்று முடிப்பீர்கள். அவசரப் போக்கால் சிலரின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

**கடகம்:** நீண்ட நாளாக கிடைக்காத நன்மை ஒன்று கிடைக்கும். பணியிடத்தில் வேலைகளைச் சிறப்பாக செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். வீண் குழப்பம் வேண்டாம். உறவினர் சந்திப்பால் நிம்மதி உண்டு. குழந்தைகளால் நன்மை உண்டாகும்.

**கன்னி:** குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினை ஒன்று தீரும். இன்று புதிய செயலைச் செய்வோருக்கு முன்னேற்றம் உண்டு. கலைத்துறையினர் சிலருக்கு வாய்ப்புக் காத்திருக்கிறது.

**துலாம்:** குடும்பஒற்றுமைபலப்படுவதால் மனநிறைவு காண்பீர்கள். குடும்பத்தினர் அனைவரும் ஆன்மிக யாத்திரைக்கு செல்வீர்கள். உறவினர் ஒருவரால் உங்களுக்கு நன்மதிப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சோம்பல் நீங்கும். தெய்வவழிபாட்டில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உற்சாகமான நாள்.

**தனுசு:** நண்பர்களின் உதவியால் பிரச்சினை தீரும். பணிமாற்றம் ஏற்படும். இன்றைய செயல்கள் அனைத்திலும் கவனமாக இருக்கவும். மனதுக்கு அமைதி தேவை. பேச்சில் படபடப்பு வேண்டாம்.

**மகரம்:** மற்றவர்கள் கேட்டால் மட்டுமே உதவி செய்யவேண்டும். வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் வராதபடி பார்த்துக்கொள்ளவும். நல்ல செய்தி உங்களுக்கு மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். தீய பழக்கங்கள் உங்களை அணுகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**மீனம்:** நீண்டநாளாக இருந்து வந்த பிரச்சினை நண்பரின் உதவியால் தீரும். அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த நன்மை இன்று வரும். இன்று உங்களுக்கு வாசனைப் பொருள்கள் கிடைக்கும்.


## மரண அறிவித்தல்

### கந்தையா காசிராசா (சின்னத்துரை)

(தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரி முன்னாள் அலுவலக பணியாளர்)



அடவம்பற்று அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா காசிராசா (சின்னத்துரை) அவர்கள் நேற்று (11.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், திலகவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தேவராசா, மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, ஜீவகாந்தன் (சந்திரன்), பரமேஸ்வரன் (செல்வம்), கனகேஸ்வரி (ஈஸ்வரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் தெற்கு காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 10.08.1943 மறைவு 11.04.2022

தகவல்
குடும்பத்தினர்

(CS 19291 (4/6)



## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 07 - 1946



மறைவு 11 - 04 - 2022

### தம்பிராசா அருளானந்தம்

அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா அருளானந்தம் அவர்கள் நேற்று (11.04.2022) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமேனி மற்றும் அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கௌதமி மற்றும் சுபாசினி அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் தனலட்சுமி (இலங்கை), சுகிர்தலட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவலிங்கம், சண்முகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மயூரன், மயூரகாந்த், வக்சலா, கமலகாந்த், சசிகாந்த், வனஜா, கிருத்திகா, கீதன், மாலவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வளலாய் பூனங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

076 560 1691 (CS 19292) (4/6)


*குடும்ப...*

மளிக்கக் கூடாது என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார சங்ககார தெரிவித்துள்ளார்.

இன்ஸ்டாகிராம் நேரலையில் ஹெஷான் டி சில்வா உடன் நடந்த நேர்காணலில் பேசிய சங்ககாரா மேலும் தெரிவித்ததாவது:-

நாம் தேர்ந்தெடுத்த தலைவர்கள் மோசமான கொள்கைகளை வகுத்துள்ளனர். மோசமான நிதி நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளனர். ஆனால் அதைவிட மோசமாக, அவர்கள் தங்கள் சொந்த மக்களை இந்த உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் கொண்டு வந்ததற்கு கொஞ்சம் கூட வருத்தப்படவில்லை.

நாட்டில் நிலவி வரும் நெருக்கடிக்கு, மக்களுக்கு உடனடி குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகள் தேவை.

இதே அரசியல்வாதிகளை வேறு வேறு துறைக்கு மாற்றி பணியமர்த்துவதால் யாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லை. இதனால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

தெருவில் போராடி கொண்டிருப்பவர்கள் புதிய தலைமுறை இளைஞர்கள். கூடுதல் விழிப்புணர்வுடன், விவேகத்துடன், உறுதிப்பாடுடன் மற்றும் அச்சமற்ற ஒரு புதிய சமுதாயம் ஒன்றுபட்டு இந்த இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

இலங்கை, இந்த நெருக்கடியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, இனவாதம் மற்றும் மதப் பிளவு சமூகம் அல்லது அரசியலில் எந்தப் பங்கையும் வகிக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் என நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன்- என்றார். (அ-ஒ-இ)

*லொறி...*

யதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் சத்திரச்சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவரான அஜிந்தன் அபினயன் (வயது- 10) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்றுறை- தம்பாட்டியில் வசித்து வரும் சிறுவன், கற்றல் நடவடிக்கைகளுக்காக கொக்குவில் தாவடி பகுதியில் பேர்த்தியாருடன் தங்கியுள்ளான்.

யாழ்ப்பாண நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக பேர்த்தியாருடன் மோட்டர் சைக்கிளில் சிறுவன் சென்றுள்ளான்.

சத்திரச்சந்திக்கு அருகில் கே.கே.எஸ். வீதியில் வேகமாக வந்த லொறி மோட்டார் சைக்கிளை பின்பக்கமாக மோதியதில் சிறுவன் வீழ்ந்துள்ளான். லொறி சிறுவன் மீது ஏறியதில் தலை நசிந்து சம்பவ இடத்திலேயே சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

திடீர் இறப்பு விசாரணைகளை போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

*யாழில்...*


நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு மலேரியா காய்ச்சலுடன் கண்டறியப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி நைஜீரியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். கடந்த சில தினங்களாக காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு சென்றபோதும் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய தகவலை ஆரம்பத்தில் மறைத்துள்ளார். இதனால் காய்ச்சலை கண்டறிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மந்திகை மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்பட்ட ஆராய்வுகளின்போதே, வெளிநாடு சென்று வந்த தகவலை வெளிப்படுத்தியுள்ளார். இதன் பின்னர் அவருக்கு முன்னெடுக்கப்பட்ட சோதனைகளில் மலேரியா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடு சென்று வந்தவர்களில் கடந்த டிசெம்பர் மாதம் 2பேரும், ஜனவரி மாதம் 2பேரும் யாழ்ப்பாணத்தில் இதுவரை மலேரியாவுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

'வெளிநாடுகளுக்குச் சென்று வந்தால் அது தொடர்பான தகவலை வெளிப்படுத்தவேண்டும். நோயைக் கண்டறிவதற்கு உதவியாக இருக்கும். வெளிநாடுகளிலிருந்து வந்து காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லவேண்டும்' என்று பிராந்திய மலேரியா தடைப்பிரிவு மருத்துவ அதிகாரி [illegible]குமரன் தெரிவித்தார். (அ-ஒ-5-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் வளாகத்தில் கடந்த ஐந்து வருடங்களாக மழை, வெயிலில் காணப்பட்ட மின்பிறப் பாக்கியின் பாதுகாப்புக்கென அண்மையில் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. (ச-9)

# பேசாலை ஊடாக சட்டவிரோதக் கடத்தல்கள் உடன் தடுத்து நிறுத்துங்கள்

## அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்து

**மன்னார், ஏப். 12**

**பேசாலை ஊடாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கடத்தல்கள் மற்றும் இதர சமூக விரோதச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்குத்தல கேட்போர்கூடத்தில்பங்குதந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

தற்போது பேசாலையூடாக நாட்டை விட்டுச் செல்வோர் அதிகரித்துள்ளது. இந்த நிலையிலும், பேசாலை ஊடாக போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. எனவே அவற்றைத் தடுக்கும் நோக்குடன் கடற்படையினர் பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகள் ஊடாக இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். பேசலை ஊடாக மேற்கொள்ளப்படும் சமூக விரோதச் செயற்பாடுகளை தடுத்த நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விடயத்தில் மீனவர்கள் கடற்படையினருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மீனவர்கள் மற்றும் அரசு அரசு சார்பற்ற பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தபோது, பேசாலை கடற்கரையோரத்தில் மின் அனல் காற்றாலை அமைக்கப்பட்டுள்ளதால் இந்தப் பகுதியில் மீன்பிடி குறைந்துள்ளது. இந்திய இழுவைப் படகுகளாலும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றை ஈடுசெய்ய முடியாது தவிப்போர், குறுக்கு வழியில் சம்பாதிக்க முயல்கின்றனர். இதுவே சமூக விரோத நடவடிக்கைகளுக்கு முக்கியமான காரணமாக அமைகின்றது. சமூக விரோதச் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

அவை தொடர்பாக தகவல் வழங்கிய சிறிது நேரத்திலேயே சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தத் தகவல் பகிரப்படுகின்றது. அதனால் பலர் தகவல் வழங்க அச்சப்படுகின்றனர். எமது பகுதியில் இருந்து சமூக விரோதச் செயல்கள் இல்லாது அகற்றப்பட வேண்டும் என்பதையே நாமும் விரும்புகின்றோம்- என்றனர். இந்தக் கலந்துரையாடலில் தலைமன்னார் கடற்படை முகாம் தளபதி குமார, மன்னார் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரி எஸ்.பவானி பேசாலை மீனவ சமூகப் பிரதிநிதிகள் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-60)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஏப்.12

களனிப் பல்கலைக்கழக மொழியியல் முதுகலை மாணிப் பட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

ஆங்கிலமொழி மூலமான இந்தக் கற்கைநெறிக்கு எதிர்வரும் மே மாதம் 07ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்க முடியும்.

www.fgs.kln.ac.lk எனும் இணையத்தளத்தில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 12

மீசாலை வீரசிங்கம் தேசிய பாடசாலையில் சேர்ப்பதற்காக விண்ணப்பித்தவர்கள் மற்றும் எதிர்பார்த்திருப்போருக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள நாளை புதன்கிழமை காலை 8:30 மணிக்கு உரிய ஆவணங்களுடன், மாணவர்களையும் (சீருடையுடன்) அழைத்து வருமாறு பாடசாலை நிர்வாகம் கோரியுள்ளது. (ய-26)

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை வழமைபோன்று இடம்பெறும்.

காலை 8 மணிக்கு புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின்னர் பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க)

# விளையாட்டு விழா

கைதடி, ஏப். 12

கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வளர்மதி முன்பள்ளியின் முகாமைத்துவக்குழுத் தலைவர் செ.மதனரூபன் தலைமையில் முன்பள்ளி வளாகத்தில் நிகழ்வுகள் நடைபெறும். (ய-288)

# மஹோற்சவம் இன்று

கொடிகாமம், ஏப். 12

மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 18ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 21ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் வைரவர் பொங்கலும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ய-159)


# சிவதீட்சை பெறுதல்

யாழ்ப்பாணம், ஏப். 12

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள சிவதீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் இல.18,குமாரசாமி வீதி, (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்பாக) ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சிகா.கமலநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் எட்டாவது குரு பீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலையில் வரணி ஆதீன தீட்சாகுரு சிவஸ்ரீ கு.வீரசிங்கக் குருக்களால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது.

சைவப்புலவர் , இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை சிவதீட்சை பெற்றுக்கொள்ளாதவர்கள் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அறிவித்துள்ளது. (ச)



வரணி வடக்கு அ.த.க. பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 8ஆம் திகதி அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினரா தென்மராட்சி திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல.லிங்கேஸ்வரன் கலந்துகொண்டார். (ச-159)



# கவிதை நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்த சங்கரி சிவகணேசன் எழுதிய 'உன் நிலம் நோக்கி நகரும் மேகம்' என்ற கவிதை நூல் அறிமுக விழா சுவிஸில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நூல் ஆய்வுரையை ஈழத்து மூத்த பெண் படைப்பாளி ஆதிலட்சுமி சிவகுமாரும், சிறப்புரையை ஜெனீவா தமிழ் இலக்கிய பேரவைத் தலைவரும் எழுத்தாளருமாகிய க.அருந்தவராஜாவும் வழங்கினர். (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்

## தரம் - 5 புலமைப்பரிசில்

## மாணவர் கௌரவிப்பு - 2021


காலம்-12.04.2022



கலாசுபை இளங்கோவன் (அதிபர்) | திருமதி செல்வராணி சின்னத்துரை (உதவி அதிபர்) | திரு.என்.எஸ்.தீபன் (ஆசிரியர்) | திரு.சி.சிவானந்தம் (ஆசிரியர்) | திருமதி பூமாலினி ஜெயசீலன் (ஆசிரியர்)



T.Lokerth - 184 M. Thaarun -182 E. Keerthikan-174 S.Abinaya-173



V.Lathusanth-172 S. Yuvakini-172 T.Kavishan-171 K.Abishagini-169 T.Navishana-169 B.Sajana-169 K. Kabeena-169 T.Kajani-168 A.Ankha-168 V.Lenujah-167



S. Pavishna-163 S. Lithush-162 S.Abiram162 U.Pavishan-161 U.Mahisahan-161 K Jasmika-161 T. Ezhil-159 M.Asmitha-159 V.Ajay-155 S.Piruththika-154



V.Akshaya-154 R. Sanju-152 V.Arush-152 U.Sinthiya-151 Y.Thilaxshana-150 N.Mathutharan-149 S.Abisan-149 V.Thanoshan-149 L.Kavippriya-149 A. Niloyan-148



B.Thulasikan -146 M.Harini -146 S.Mathuranthy-145 K.Mathushaya -145 F.Harish-142 R.Anushga -142 R.Jenusha -142 G.Rishvin -141 K.Prishka -140 R.Yathursha-139



K.Kaniska -139 P.Anesh -138 D.Maryshahana -138 N.Kirujan -137 K.Sakiththiyan-137 K.Guhanija-137 M.Yathurshan -135 M.Aksikan-134 S.Jathusajini-133 S.Kimsiga -131



M.Nitharsana -131 K.Dushaly-130 V.Thishani-129 P.Thusanikka -129 A.Sapthika-128 V.Thalomika -128 V.Kasmika-127 S.Mathusan-126 K.Abinaya -126 T.Dakshika -123



P.Kisoth -122 R.Shainy -120 U.Pathuyan -119 J.Sethushan -119 J.Sethusha -119 M.Pirapaakaran-117 J.Adsajini-117 R.Niksana -116 K.Janahavi -113 S.Sathurja -112



N.Sobisan -111 T.Abiram -108 S.Pirannavai-103 R.Kajaram -103

| | | | | | |
|---|---|---|---|---|---|
| R.Laxshana 135 | S.Jasmitha 123 | S.Nerusha 116 | S.Abarna 115 | S.Kopikan 114 | N.Kirisa 107 |

P.Kuberan-98 S.Sivasangar-95 A.Adsan - 94 T.Adsayan - 89 T.Kithursan-85
P.Kavippiriya-85 E.Sarvin - 83 V.Vithushaliny - 76 N.Asmika-75 T.Kajeekaran-72

மாணவர் மொத்த எண்ணிக்கை - 94 100 புள்ளிக்கு மேல் - 84 (89.36%)
வெட்டுப்புள்ளிக்கு மேல் - 34 (36.17%) 70 புள்ளிக்கு மேல் -94 (100%)


**எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த இம் மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

அனுசரணை: திரு.கருணாநிதி [illegible]
அவுஸ்திரேலியா

பாடசாலைச் சமூகம்
யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் அய்யாத்துரை
**ஸ்ரீகோபாலகிருஷ்ணபிரசாத்**
(கிருஷ்ணாஸ்)

தோற்றம் 26.11.1948 — மறைவு 12.03.2022

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே!!

மண்ணோடு உங்கள்
பூதவுடல் மறைந்துவிட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(CS 44100) (2.6)

குடும்பத்தினர்

## உடன் வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான (Ics Cream Shop) ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு வேலையாட்கள் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**(தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்)**

தொடர்பு:- **077 378 8746**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 . 02 . 1948 — இறப்பு 24 . 03 . 2021



**சிவஞானசுந்தரம் சறோஜினிதேவி**

(உண்டுவத்தை அல்வாய் தெற்கு, அல்வாய்)

முதலாம் ஆண்டு கடந்து போனாலும் அகத்தினில் உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம் அம்மா!
வாழ்க்கைப் பயணத்தின் வடிவங்கள் மாறினதம்மா
உங்களை இழந்து தலைமை இன்றி
தவித்துக் கொண்டிருக்கின்றோமம்மா.
இனிவரப்போகும் நீண்டகாலப் பொழுதெல்லாம்
உங்கள் நினைவோடும் ஆசியோடும்
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடருமம்மா.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உண்டுவத்தை, அல்வாய் தெற்கு, அல்வாய்.

மகன். **077 115 1335**

(CS 44032) (4/6)

## ஊழலுக்கு எதிரான மனநிலையை ஏற்படுத்தியவர் அநுர குமாரவே!

கொழும்பு, ஏப்.12

ஊழல்களைத் தடுக்கும் கொள்கையை உங்கள் மத்தியில் விதைத்தவர் அநுரகுமார திசாநாயக்கவே.

அவர் வெளிப்படையாகப் பேசியிருக்காவிட்டால் நாட்டை எப்போதோ விற்றிருப்பார்கள். இன்று போராடும் இளைஞர்கள் மத்தியில் ஜனாதிபதியும், அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தவர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது; அரசாங்கத்தின் ஊழல் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் வெளிப்படையாகப் பேசியிருக்காவிட்டால் நாட்டை எப்போதோ விற்றிருப்பார்கள். ஊழல்களை அம்பலப்படுத்தியவர் அநுரகுமார திசாநாயக்கவே. இது வீதியில் இறங்கிப் போராடும் தோழர்கள் பலருக்குத் தெரியாது. ஊழல்களைத் தடுக்கும் கொள்கையை உங்கள் மத்தியில் விதைத்தவர் அநுரகுமார திசாநாயக்கவே -என்றார். (எ-இ)

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் அதிக விறைப்பு, வீக்கம், முழங்கால் தீவிர பாதிப்பு, பாரிசவாதம், மூட்டுதேய்வு, மாறாத புண்கள், அல்சர் உடனடி நிவாரணம். (CS 19285) (4/6)

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, மானிப்பாய். (ஜெகபதி வீடு)

தொடர்புக்கு:- 077 321 2740

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்கு உடன் தேவை. (CS 00989) (4/6)

**077 916 3255**

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 10 - 1946 — மறைவு 11 - 04 - 2022



## திரு. வயித்திலிங்கம் அற்புதவேல்நாதன் (வேலு)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், பாதிரி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வயித்திலிங்கம் அற்புதவேல்நாதன் (வேலு) அவர்கள் நேற்று (11.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா நேசமணி அவர்களின் மருமகனும், அஞ்சலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் செல்லையா, வயித்திலிங்கம் தெய்வநாயகி மற்றும் வேலுப்பிள்ளை செல்வபூரணம் அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் அசோகன், ரஞ்சிதகுமாரி, காண்டீபன், கருணன், உதயசூரியன் ஆகியோரின் அன்பு அத்தானும், திருவாதவூரர், திருநீலகண்டர், மகாலட்சுமி ஆகியோரின் சின்ன மாமாவும், ஷர்மினி, காயத்திரி, காலஞ்சென்ற தாரணி, தவஷாந்த், தயானந்த் காலஞ்சென்ற திருக்குமரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பானுஜா, யனுஜா, அருட்பிரகாஷ், சிவபிரகாஷ், கபிலன், சஜீவன், யனுஜன், யுவானி, மோனுசன், மிதுன், பகலவன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (12-04-2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 2.00 மணியளவில் விளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:-076 602 7361 (CR 44101) (4/6)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 10 . 1949 — இறப்பு 09 . 04 . 2022



## திருமதி இரத்தினகலாவதி யோகநாதன்

யாழ். கொக்குவில் கிழக்கு பிரம்படி ஒழுங்கையை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு குளங்கரை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினகலாவதி யோகநாதன் கடந்த (09.04.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - மனோன்மணி தம்பதியரின் தவப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், டுஷிகா, சங்கீதா, தேனுஜா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சீவகாருண்யம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரட்ணம் நேசம்மா ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற முருகேசு பாக்கியம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற பூபதி (ரதி - ஜேர்மனி), இரட்ணமகேசன் (தேவன் - ஜேர்மனி), இரத்தின மலர் (பவா - ஜேர்மனி), இரத்தினமாலதி (பேபி - ஜேர்மனி), இரத்தின வசந்தி (சாந்தி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரமோகன், வசந்தரூபி, மாணிக்கராஜா, ரவீந்திரன், காலஞ்சென்ற சிறிதரன ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாலமுரளி, ஏரகன், மிதிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சரோஜினி, காலஞ்சென்ற சந்திரலேகா, கோணேஸ்வரராஜா, ஜோக பரமேஸ்வரன், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
யோகநாதன் -077 119 0903, ஏரகன் - 075 785 1249
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REGISTER NOW !

Hotline
0710 770 770,
0717 140 000

Registorad with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION
Approved by: Foreign Ministry

நிச்சயமான தொழிலை இலக்காகக் கொண்ட பாட நெறி
O/L பின் SCHOOL OF NURSING
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புக்கள் அதிகளவில் பெற்றுத் தர ஒரே ஒரு தாதியர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் நுளைவுக்கான அடிப்படைத் தகைமைகள்

- ❖ க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
- ❖ உயரம் 4அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.
- ❖ வயதெல்லை 16 – 30 றகு இடைப்பட்டிருத்தல்.

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக.....

A/L பின் MEDICAL LABORATORY TECHNOLOGY ASSISTANT
ஆய்வுகூட உதவியாளர் பயிற்சி நெறி

க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய நீங்களும், இப்பொழுது ஆய்வுகூட உதவியாளராகலாம்.






PV 114302

பிரதான காரியாலயம்
## அய்வா தாதியர் பாடசாலை
28, பார் வீதி, மட்டக்களப்பு 071 872 2353, 065 222 9666
Web : www.myhopegroup.com E-mail : nadheer1976@yahoo.com

கிளைகள்

திருகோணமலை
203, பிரதான வீதி,
திருகோணமலை
071 992 6681

யாழ்ப்பாணம்
154, A/12, 2ம் மாடி,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
071 872 2350, 071 770 770

முல்லைத்தீவு
P.W.D Road, Vannankulam,
Mullaititu.
077 171 0172, 075 286 8472
071 872 2352

wahts app மூலமும் தகவலைப் பெற்றுக் கொள்ளலாம். 0717 140 000


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 07 . 09 . 1927



ஆண்டவன் அடியில் 13 . 04 . 2021

## அமரர் திருமதி கனகசபை தவமணி
(ஓய்வுநிலை உபதபாலதிபர், எழுதுமட்டுவாழ்)

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்டு எமது வழிகாட்டியாய் எம்மனைவரையும்
அரவணைத்த எம் அருமைத் தெய்வமே!
ஆண்டொன்று போனாலும் உங்கள் அழகிய
அன்பு முகம் எம்மைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்லபெரிய கேணி பிள்ளையாரின் பாதங்களை
இறைஞ்சுகின்றோம்.

நாளை (13.04.2022) புதன்கிழமை எமது அன்பு அன்னையின் முதலாம் ஆண்டு திதியை முன்னிட்டு **எழுதுமட்டுவாழ் பெரியகேணிப் பிள்ளையார் ஆலயத்தில்** முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் பூசை ஆராதனைகளிலும் அதனைத் தொடர்ந்து 1.00 மணியளவில் நடைபெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**நாகர்கோவில் றோட்,**
**எழுதுமட்டுவாழ்.**

(cs.44097) (2.6)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**உறவினர்கள்.**

# 15ஆம் ஆண்டு பசுமையான நினைவுகள்

கருவறையில் 10.12.1948

கருவறையில் 05.02.1954



கல்லறையில் 28.03.2007

கல்லறையில் 28.03.2007

## வைரமுத்து சிவகணேசதாசன் · சிவகணேசதாசன் சறோஜினி

திதி:- பங்குனி மாதம் வளர்பிறை ஏகாதசி



மாநிலத்தில் நீங்கள் பிரிந்து தீராத துயரத்தில்
தேம்புகின்றோம் நாம் இங்கு!
பிள்ளைகள் எங்களை தவிக்கவிட்டு இமைகளை மூடி
இறைவனை நாடி விட்டீர்கள்!
உங்களை எண்ணித்தினம் தினம் மனம் வெதும்புகின்றோம்!
காலன் உங்களை காலத்தால் அழைத்த வேளை
விதி செய்த சதி தானே என்று எம் மனது எண்ணினாலும்
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள்.
எம் வாழ்வுள்ளவரை நிழலாய் நீங்கள் தொடர்வீர்கள்.
கல்லறை வாழ்வில் நெடுங்காலம் சென்றாலும்
எம் நெஞ்சறைக்கூட்டில் அழியாத ஓவியம் நீங்கள்
இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையென்றால்
அப்போதும் நீங்களே எங்கள் தாய் தந்தையாய் வர வேண்டும்.
என்ற வரத்தை வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நினைவுகளுடன்
மகன் :- சர்வாநந்
மகள் :- சர்மிளா
மருமகன் :- சிவகுமார்
பேரன் :- [illegible]
பேத்தி :- [illegible]
சகோதரர்கள்

**"கணேச பதி"**
**கற்பக பிள்ளையார் வீதி**
**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

(CS 19261) (4/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1939



மறைவு 11 . 04 . 2022

## பொன்னம்பலம் யோகவதி

தலுவில் ஒழுங்கை நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் யோகவதி நேற்று (11.04.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மருதநயினார் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மருதநாயினார் பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பாக்கியம், தம்பு, சிதம்பரப்பிள்ளை, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் தனலட்சுமி, கோபாலசிங்கம், விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, ராஜலட்சுமி, உமாலட்சுமி, ஜீவலோஜினி ஆகியோரின் அன்புத் தாயும், தெய்வநாயகி, இராஜேஸ்வரன், கனகாம்பிகை, ஆனந்தபாலா, உதயகீதன், ஸ்கந்தராசா, தவச்செல்வம், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஸ்யந்தன், அரவிந்தன், சந்தியா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், வினோத், வித்தியா, ருஷாந்தன், சஸ்மிகா, பங்கயன், அபிநயா, செந்தூரன், பகிதரன், யதர்சன், டிலக்சன், சந்தோஷ், தமிழினி, கிருசன், தர்மினி, தர்சினி, நிருத்திகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், தருணிகா, சஸ்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2022) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

(cr 37832) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாவிகளும்

## கோத்தாவுக்கு எதிராக நேற்று போராட்டம்

கொழும்பு, ஏப். 12

ஜனாதிபதி கோத்தாபயவுக்கு எதிராக அம்பலாங்கொட கஹவாவில் சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையால் நாட்டுக்குள் சுற்றுப்பயணம் செய்ய முடியவில்லை எனத் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-இ)



காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இணைந்து கொண்ட புதுமணத் தம்பதியர்.

காதலி உயிரிழந்த சோகத்தில்

## காதலனும் தவறான முடிவு எடுத்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

தவறான முடிவு எடுத்து காதலி ஒரு மாதத்துக்கு முன்னர் உயிரிழந்திருந்த நிலையில் காதலனும் தவறான முடிவு எடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த உதயகுமார் கனிஸ்ரன் (வயது -23) என்ற ஊவா பல்கலைக்கழக மாணவனே இவ்வாறு தவறான முடிவு எடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரின் காதலி ஒரு மாதத்துக்கு முன்னர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருந்தார். இதனால் இவர் கவலையில் இருந்ததாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பருத்தியடைப்புகாட்டுப்பகுதிக்குள்சென்று நேற்று தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ-26)

## விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 12

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கைதடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

கைதடி பாலத்தடியில் வசிக்கும் சுப்பன் சுதாகர் (வயது -52) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ-26,288)

# பிரமுகர்களுக்கான வீதித் தடை சாரதிகளின் எதிர்ப்பால் நீக்கம்

கொழும்பு, ஏப். 12

கொழும்பில் நேற்று இரவு பிரமுகர்களின் வாகனம் செல்வதற்காக பொலிஸார் ஏற்படுத்திய வீதித்தடை சாரதிகளின் எதிர்ப்பையடுத்து விலக்கப்பட்டது. பிரமுகர்களின் வாகனம் செல்வதற்காக, பிரதான வீதியின் நடுவில் நின்று பொலிஸார் வாகனங்களை மறித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சாரதிகள், வாகனங்களை நடுவீதியில் நிறுத்தி விட்டு இறங்கி பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்தச் சாரதிகளுக்கு ஆதரவாக, வீதியில் நின்றுகொண்டிருந்த ஏனைய வாகனங்களின் சாரதிகள் 'ஹோர்ன்' எழுப்பி ஆதரவு தெரிவித்தனர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பொலிஸார், வீதித் தடையை உடனடியாக நீக்கி மக்களின் போக்குவரத்துக்கு இடமளித்தனர். (ஒ-5)

*போராட்டக்காரர்களை...*

ராஜபக்ச அரசைக் கூண்டோடு வீடு செல்லுமாறு வலியுறுத்தி நாடு முழுவதும் தீவிரமாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாட்டு மக்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று விசேட உரையாற்றினார்.

அவரது உரையில் முக்கியமாக,

**துன்பம் விளங்குகின்றது**

கொரோனாத் தொற்றுநோய்க்கு பின்னர் நாம் எதிர்கொள்ள வேண்டி நேரிட்ட பொருளாதாரப் பிரச்சினைகளை நம் நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என்று நான் நம்புகிறேன். இந்தத் தொற்றுநோய் தாக்கத்திலிருந்து நம் மக்களை எம்மால் பாதுகாக்க முடிந்த போதும், தற்போது எங்கள் நாடு சவால்களுக்கு உட்பட்டு இருப்பதை எமக்கு உணர முடிகின்றது. நாடு முடக்கப்பட்டதோடு அந்நியச் செலாவணி வீழ்ச்சியடைந்ததுடன், வெளிநாட்டு கையிருப்பு சிதைவடைந்தது என்பதை நான் கூறி தெரியவேண்டியதில்லை. கடலில் எண்ணெய்க் கப்பல்கள் கண்களுக்கு எட்டும் தூரத்தில் இருந்தபோதும் அவற்றை பெற்றுக்கொள்வதற்கான டொலர் எம்மிடம் இல்லாததால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதற்கு நேரிட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல நாள்களாக வரிசையில் நிற்கும் மக்களின் கஷ்டம் எமக்கு நன்கு புரிகின்றது. எரிவாயுவை பெற்றுக்கொள்ள வரிசையில் நின்ற பெண்களின் வேதனையை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. பொருள்களின் விலை, விண்ணைத் தொடும் அளவுக்கு அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அனுபவித்துவரும் துன்பம் குறித்து நம் அனைவருக்கும் நல்ல புரிதல் உள்ளது.

மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் வெளிநாடுகளிலிருந்து உதவிகளை பெற்றுக்கொள்ளும்போது, நாட்டின் சுயாதீனத்தை பாதுகாத்து உதவிகளை பெற்றுக்கொள்வதற்கே நாம் எப்போதும் முயற்சித்தோம். அதனால் தான், பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதும் பொதுமக்களின் ஆணைக்கு மதிப்பு கொடுத்து அவற்றை நாம் மேற்கொள்ளாமல் இருந்தோம்.

இந்நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையை சிதைக்காத வகையிலான தீர்மானத்தை மேற்கொள்வதே மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த எமது பொறுப்பாகும். அந்த நோக்கத்துக்காகவே நாம் தொடர்ந்தும் சேவையாற்றி கொண்டு இருக்கின்றோம்.

கிடைக்காமல் போவதும், கைவிடுவதும் கூட அரசியலில் எமக்கு மிகவும் பழக்கப்பட்டதொரு விடயமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**ஜனநாயக மறுப்பு பயங்கரமானது**

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் வேண்டாம் என்ற மக்களின் கோஷம் எமக்கும் கேட்கின்றது. அதனூடாக கூறவருவது, இந்த ஜனநாயக முறையை மறுப்பதாயின் அதன் பயங்கரமான வரலாற்றை நோக்கி புரிந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்துக்கு குண்டுவீசி முழு நாடாளுமன்றத்தையும் அழிப்பதற்கான முயற்சியால் ஏற்பட்ட விளைவை நாம் கண்கூடாக கண்டுள்ளோம்.

அன்று நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் மறுக்கப்பட்டதன் விளைவால், வீதியெங்கிலும் இளைஞர்களின் குருதி வழிந்தோடியது. டயர்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். 1988 மற்றும் 89 களில் 60ஆயிரத்துக்கும் அதிகமான இளை[illegible] இழக்க நே[illegible] இளைஞர்களின் உயிர்களை காப்பதற்காக மேற்கொண்ட கஷ்டம் உங்கள் மூத்தோர்களின் நினைவிலிருக்கும் என்பதை நாம் அறிவோம்.

தெற்கு போன்றே வடக்கு இளைஞர்களுக்கும் நான் அது குறித்து ஞாபகப்படுத்த வேண்டும். அந்த கடந்த காலத்தை உங்களது பெற்றோர் மற்றும் மூத்தோர்களிடம் கேட்டறிந்து கொள்ளலாம். நாடாளுமன்றம் வேண்டாம், தேர்தல் வேண்டாம் என்று மக்கள் பிரதிநிதிகளை வீதிகளில் கொன்றே, 197080 களில் வடக்கு இளைஞர்கள் ஆரம்பித்தனர்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அரசியல் இயக்கத்தால் 30 ஆண்டு காலமாக வடக்கில் மட்டுமல்ல தெற்கு மக்களும் கஷ்டத்தை அனுபவித்தனர். கண்ணிவெடிகளுக்கும், துப்பாக்கி தோட்டாக்களுக்கும் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். அவர்கள் இருந்த அடையாளமே தெரியாது போனது. கொஞ்சம் கொஞ்சமாக பாடசாலை மாணவர்களையும் போராட்டங்களுக்கு இழுத்து செல்ல ஆரம்பித்தனர். அடுத்ததாக, மாணவர்களை பலவந்தமாக போருக்கு இழுத்துச் சென்றார்கள்.

அன்றும் நாடாளுமன்றம் வேண்டாம் என்றே ஆரம்பித்தார்கள். அவற்றின் விளைவை அறிந்தமையால், நீங்கள் பிறந்த நீங்கள் வாழும் இந்த நாட்டை மீண்டும் அந்த இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று அன்பார்ந்த பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்கிறோம்- என்றார்.

பிரதமர் தனது விசேட உரையில் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பிலோ, அரசியல் நெருக்கடிக்கான தீர்வு தொடர்பிலோ எதுவும் கருத்துரைக்கவில்லை. அத்துடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு [illegible]ரையாற்றும் போது தெரி[illegible]போன்று உருக்கமாகப் பேசி போராட்டங்களைத் தணிக்கும் வியூகத்தையே பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் முன்னெடுத்தார். (அ-ஒ-5)

*40 ஆயிரம்...*

செய்யப்படும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த அரிசி, ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படும் என்று அமைச்சின் செயலர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ச.தொ.ச. ஊடாக ஒரு கிலோ கிராம் நாட்டரிசி மற்றும் பச்சையரிசி 110 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 130 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டு காலத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய பொருள்களும் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்படுவதாக அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. ஆயினும், பால் மாவுக்கு மாத்திரம் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறையவடையக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,இ)

*கோத்தா...*

பட்டது.

இந்த நிலையில், பேரணியில் கலந்து கொள்பவர்கள் உட்கொள்வதற்கென அறிவித்தலிட்டு, புல், புண்ணாக்கு உள்ளிட்ட மாடுகளின் தீவனங்கள் பேரணி நடைபெறும் என்று கூறப்பட்ட பகுதியில் வைக்கப்பட்டிருந்தன.

பேரணியில் சுமார் 50 க்கும் குறைவானவர்களே கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எரிபொருள்...*

பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் டீசல் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

தனது பாரவூர்திக்கு டீசலை பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வந்து அங்கு காத்திருந்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. சாரதி இருக்கையில் மயங்கிய நிலையில் இருந்த அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும் அவரது உயிரைக் காப்பாற்றமுடியவில்லை.

எரிபொருள் வரிசையில் நின்று உயிரிழந்த 8ஆவது நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

*3 நாள்களுக்கு...*

கொள்கலன்களில் விநியோகிப்பது இன்று முதல் மூன்று நாள்களுக்கு இடைநிறுத்தப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். எனினும், கொள்கலன்களில் மண்ணெண்ணெய் பெறுவதில் எந்தத் தடையும் இல்லை.

விவசாயத்துக்குத் தேவையான டீசல், பெற்றோல் போன்றவற்றை பிரதேசத்தின் கமநல உத்தியோகத்தர் அல்லது கிராம அலுவலரின் சான்றிதழுடன் நிரப்பு நிலையத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி 1ஆம் வீதியில் 6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு (2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், ஒரு பரப்பின் விலை 700 000/-A-9 வீதியிலுள்ள பெற்றோல் செற்றிற்கு அருகாமை வீதியில் (CR 8253) (4/6)

தொடர்பு:- 074 043 6599

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடச் சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் 16 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது)
ஒரு பரப்பின் விலை எட்டு லட்சம் (8 லட்சம்)

பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM

தொடர்பு: 077 862 6251,074 008 9086,077 883 4749


# மக்கள் போராட்டத்தில் இணைகின்றது ஐ.தே.க.

## *ரணில் புது வியூகம்*



**கொழும்பு, ஏப்.12**

**அரசாங்கத்தைப் பதவிவிலக் கோரி மக்களால் நடத்தப்பட்டுவரும் தொடர் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் இனி இணைந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தனியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும், தற்போது மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் கலந்துகொள்வதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அனுமதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தனவுடன் கலந்தாலோசித்து, அமைதியான முறையில் இளைஞர்களின் போராட்டத்துக்கு ஆதரவளிக்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க கட்சிச் செயற்பாட்டாளர்களுக்கு பணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 23 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 72 தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-
077 814 7389, 077 241 7589

## DMI Jaffna

A/L தோற்றியவர்களுக்கான
சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்.
நிர்வாகி
077 8480 604
(CS 19283) 1-6

## சுத்திகரிப்புப் பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும்
பிரபல நிறுவனமொன்றுக்கு
சுத்திகரிப்பாளர் தேவை.
(இருபாலாரும்)

தொடர்பு: 070 356 7811

## பணிப்பெண் தேவை

ஒரு வயது குழந்தையை பராமரித்தல் மற்றும் சமையல் வேலைக்கு பணிப்பெண் தேவை. காலை முதல் மாலை வரை தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. (CS 19287) (4/6)

உரும்பிராய் கிழக்கு, 077 777 0030


# மரண அறிவித்தல்

தோற்றம்
16 - 07 - 1950



மறைவு
11 - 04 - 2022

## திருச்செல்வம் புஸ்பராணி

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் புஸ்பராணி அவர்கள் நேற்று (11.04.2022) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ராசா, நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரையப்பா, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், சிவானுஜன், சிவானுஜா, சிவாஜினி, காலஞ்சென்ற சிவச்செல்வி, சிவசுதன் (விது லாப்) அவர்களின் அன்புத்தாயாரும், சத்தியா, புஸ்பராஜ், நகுலேந்திரராசா அவர்களின் அன்பு மாமியாரும் கஸ்வின், கேசிகா, விதுசனா, பரிநிதா, பவின், அகல்வன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரராஜசிங்கம், லங்காதேவி, காலஞ்சென்ற சந்திராதேவி, காலஞ்சென்ற சரோஜாதேவி மற்றும் விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலசுந்தரி, லலிதா, மீனாட்சி, காலஞ்சென்ற ரட்ணசிங்கம் மற்றும் லோகநாதன், கேசவன், சரோஜினிதேவி, காலஞ்சென்ற தவச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற தியாகராஜா காலஞ்சென்ற தவமலர் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் அரவிந்தன், பிரதீபன், சுஜீவன், காலஞ்சென்ற நாகருபன், சசிதரன் ஆகியோரின் அன்புச் சித்தியும், மலர்விழி, சஞ்சீவன், லகரி, மஞ்சரி, விஜயரூபன், விஜயகாந்தன், வினோத், வைதேகி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் வக்சலாதேவி, சுரேஸ்காந், நிரஞ்சலாதேவி, சுதாமதி, சுஜாதா, வினோதன், சுதர்சி ராகுலன், தேனுகா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
மகன்:- 0044 790 036 8162 (லண்டன்)
மகள்:- 0094 771 626 279 (இலங்கை)
மகன்:- 0094 776 630 466 (இலங்கை)
மகள்:- 0049 176 724 90328 (ஜேர்மனி)

30/9 நாவலடி லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(CS 19287) (4/6)

# மரண அறிவித்தல்

## றாம்ஜெயம் தரணீதரன்



உடுவில் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றாம்ஜெயம் தரணீதரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (10.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் றாம்ஜெயம் யூலியட் அஞ்சலா தம்பதியினரின் அன்பு மகனும், தனுஷன் (கனடா), தரங்கினி (லண்டன்), கீர்த்தனா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்-கலைப்பீடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிலானி, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரான்சிஸ் சேவியர், இராஜேஸ்வரி தம்பதியினரதும் நாகரத்தினம் ராசம்மா தம்பதியினரதும் அன்புப் பேரனும், கவிஷ்னி, கிரித்விக் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், யுவன், யூஜின், கனிஷ்கா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2022) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 09.10.1992 மறைவு 10.04.2022

அம்பலவாணர் வீதி,
உடுவில். (CS 19294) (4/6)

தகவல்
குடும்பத்தினர்
076 324 9901, 077 857 9658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.